www.kalviexpress.in

C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## ஏழாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 1. 30 மணி

## தமிழ்

திருவாரூர் மாவட்டம்

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 6×1=6

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ..................
   அ) வழி ஆ) கொள்கை இ) அறம்
2. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............
   அ) வான் ஒலி ஆ) வானொலி இ) வானெலி
3. ஒலியின் வரிவடிவம் ............ ஆகும்.
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல்
4. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........
   அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம் இ) கா + டெல்லாம்
5. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை ............
   அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள் இ) சுடப்பட்ட பழங்கள்
6. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ...........
   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** www.kalviexpress.in. 5×1=5

1. 'எங்கள் தமிழ்' பாடலின் ஆசிரியர் ...................
2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ............ யானை தான் தலைமை தாங்கும்.
3. வானில் ................ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
4. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் ............
5. திருக்குறளில் மொத்தம் ............ அதிகாரங்கள் உள்ளன.

**III. குறுவினா (எவையேனும் மூன்று மட்டும்) - செய்யுள் :** 3×2=6

1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
3. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
4. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
5. எப்போது தன் நெஞ்சே தன்னை வருத்தும்?

**IV. குறுவினா (எவையேனும் மூன்று மட்டும்) - செய்யுள் :** 3×2=6

1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
2. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
3. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?

Send Question Paper ,Answer Key-kalviexpress@gmail.com

www.kalviexpress.in



4. வட்டார மொழி என்றால் என்ன?
5. ஊடகங்களை வகைப்படுத்துக : எழுத்துமொழி - பேச்சுமொழி
   வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

**V. சிறுவினா (எவையேனும் இரண்டு மட்டும்)** **2×3=6**

1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**VI. அடிமாறாமல் எழுதுக:** **4+2=6**

1. "அருள்நெறி அறிவைத் எனத் தொடங்கும் " எங்கள் தமிழ்" பாடலில் முதல் நான்கு அடிகளை எழுதுக.
2. "வாய்மை" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. மொழியோடு விளையாடு:** **3×3=9**

1. *தொகைச் சொற்களை விரித்து எழுதுக:*
   அ) இருதிணை : ..............., ...............
   ஆ) முத்தமிழ் : ..............., ..............., ...............
   இ) ஐவகை நிலம் : ..............., ..............., ..............., ..............., ...............
2. *கீழ்க்காணும் சொற்களை உயர்திணை,அஃறிணை என வகைப்படுத்துக:*
   வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்
3. *கலைச்சொல் :*
   1. ஊடகம் -
   2. பருவ இதழ் -
   3. தீவு -

**VIII. கடிதம் எழுதுக:** **6**

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

---------

Send Question Paper ,Answer Key-kalviexpress@gmail.com